செ.வெ.எண்.29 நாள்: 19.04.2021

# தூத்துக்குடி மாவட்டம்
# கோவிட் 19 தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள்
# ஊடக அறிவிக்கை (Media Bulletin)

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.கி.செந்தில்ராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.04.2021) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார்,இ.கா.ப., தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திரு.சரண்யா ஹரி,இ.ஆ.ப., சார் ஆட்சியர் திரு.சிம்ரன் ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கண்ணபிரான் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது குறித்தும், கொரோனா பாதிக்கப்பட்ட நபர்கள் உள்ள வீடுகள் துய்மைபடுத்தப்பட்டு பிளிச்சிங் பவுடர் தெளிப்பது குறித்தும், கொரோனா பாதிப்பு கண்டறியும் பகுதிகளில் காய்ச்சல் முகம் நடுத்துவது குறித்தும், கொரோனா பரிசோதனை செய்வதும் குறித்தும் ஆய்வு செய்தார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. தமிழக அரசு தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கண்டிப்பாக அனைத்து தரப்பினரும் கடைபிடிக்கும் வகையில் செயல்படுத்த வேண்டும். கொரோனா பாதிப்பு 3 க்கும் மேல் உள்ள தெருக்களை சுத்தம் செய்து கிருமிநாசினி தெரிக்கவேண்டும். பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு முன்பு பீளிச்சிங் பவுடர் தெளித்து சுத்தப்படுத்த வேண்டும். தினசரி நகரம் மற்றும் ஊரக பகுதிகளில் காய்ச்சல் கண்டறியும் முகாம்களை அதிக அளவில் நடத்திட வேண்டும். தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் தினசரி குறைந்தது 15 இடங்களிதவது நடத்திட வேண்டும். கொரோனா பரிசோதனைகள் தினசரி 2500 மேல் செய்திட வேண்டும். சனிக்கிழமை அன்று மேலும் கூடுதலான பரிசோதனை செய்திட வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொரோனா கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டு காவல்த்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் அங்கிருந்து மாவட்டம் முழுவதும் நடைபெற்று வரும் பணிகளை கண்காணிக்க வேண்டும். வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கொரோனா நோயாளிகளையும் கண்காணிக்க வேண்டும். கொரோனா நோயாளிகளுக்கு தரமான உணவுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தினசரி காய்ச்சல் முகாம்கள் நடைபெறும் பகுதிகள் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்க வேணடும். கிருமிநாசினி பயன்படுத்துதல் மற்றும் மாஸ்க் அவசியம் அணிதல் பொது இடங்களில் தனிமனித இடைவெளியை பின்பற்றுதல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அமுதா, திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.தனபிரியா, தூத்துக்குடி மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர்.ரேவதி, பொது சுகாதார இணை இயக்குநர் டாக்டர்.முருகவேல், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.மாரியப்பன், சுகாதார பணிகள் துணை இயக்குநர்கள் டாக்டர்.போஸ்கோராஜா, டாக்டர் அனிதா, மாநகராட்சி நல அலுவலர் டாக்டர்.வித்யா மற்றும் பல்வேறு துறைகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.

---

*முககவசம் அணிவோம் தடுப்பூசி போட்டுக்கொள்வோம் கொரோனா வராமல் பாதுகாப்போம்*